DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 38/2020

Prosecution witness – PW.4

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சித்திரவேலு | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed. )

05.03.2026 – 01.15 PM

முதல் விசாரணை

1. நான் தற்போது கீழச்செல்வனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. சித்ராதேவி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.ராணி ஆகியோர்களின் கையொப்பங்கள் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் இருவரும் தற்போது பணி மாறுதல் ஆகி சென்றுவிட்டார்கள். அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை. எனவே ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 15.12.2019ம் தேதி 17.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திருமதி.சித்ராதேவி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது கொத்தங்குளம் கிராமத்தைச் சேர்ந்த முருகேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.62/2019 இ.த.ச. பிரிவுகள் 304(A) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு அ.சா.ஆ.3 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

4. பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார். அன்றே காவல் ஆய்வாளர் திருமதி.ராணி என்பவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மலைச்சாமி மற்றும் மாயழகு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். இருவரையும் விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் சம்பவ சாட்சிகளான முருகேஸ்வரி, சுந்தரம், அம்மாள், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் எதிரியை 16.12.2019 ம்தேதி வாலிநோக்கம் விலக்கு ரோடு அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

7. பின்னர் அதே தினம் வழக்கில் இறந்துபோன பஞ்சவர்ணம் சேர்வை என்பவரின் பிரேதத்தை காலை 07.00 மணிமுதல் 09.00 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து பார்வையிட்டு பிரேத விசாரணை செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.

8. பின்னர் அன்றே வழக்கில் இறந்துபோன பஞ்சவர்ணம் சேர்வை என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பாக்கிய சகாய மெர்சிகோ என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.

9. பின்னர் 17.12.2019 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மாணிக்கம் என்பவருக்கு இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனமான AB 04 UA 0006 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக் ஆய்வு செய்யும் படி வேண்டுகோள் கடிதம்கொடுத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ,சா.ஆ.9 ஆகும். மோட்டர் வாகன ஆய்வாளர் திரு.மாணிக்கம் என்பவரை கடந்த 22.02.2020 ந் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

10. அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து அன்றே எதிரி மீது இ.த.ச. பிரிவு 304(A)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகாரைப் பெற்று முறையாக விசாரணை செய்யாமல் வழக்குப்பதிவு செய்து சம்பவ இடம் செல்லாமல் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்து போன நபர்

இழப்பீடு பெற வேண்டி பொய்யாப பதிவு செய்யப்பட்ட வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:46:38 +0530